பேசும்பொழுது, ** மியான்மர், பங்களாதேசம் என்று சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) கவன ஈர்ப்பாக இப்போது நான் எடுக்கவில்லை, தகவல் கோரலாகத்தான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன் அவர்கள் பேசுகின்றபோது, ** என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார். எனவே அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பாண்டுரங்கன் அவர்கள் ** என்று சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) வேறு subject இருக்கிறதா? No, no. திரு. தி. வேல்முருகன், உட்காருங்கள். (குறுக்கீடு)

3. கேரளாவில் தமிழர்கள் வாழக்கூடிய பகுதிகளில் பொங்கல் திருநாளுக்கு அரசு விடுமுறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு, கேரள அரசிற்கு, அங்கு வாழக்கூடிய தமிழ் மக்களுக்குப் பொங்கல் விடுமுறை விட வேண்டுமென்கிற வேண்டுகோளை விடுத்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் மாநிலக் குழுவும் இந்த வேண்டுகோளை வைத்திருந்தது. இதனை ஏற்ற கேரள அரசு, அங்கிருக்கக்கூடிய தமிழ் மக்களுக்குப் பொங்கல் விடுமுறையை விட்டிருக்கிற மகிழ்ச்சியான செய்தியை இங்கே பரிமாறிக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.